தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்புப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தஞ்சாவூர் வட்டம்

## விளம்பரம் வேலைவாய்ப்பு அறிவிக்கை

**ந.க.எண்.01/2025/அ3** **நாள்: 16.10.2025**

**(அரசாணை எண்.46, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே.2) துறை, நாள்: 23.09.2016-ன் கீழ் வெளியிடப்படுகிறது)**

1. தஞ்சாவூர் (நெ), க(ம)ப வட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தஞ்சாவூர்(நெ), க(ம)ப கோட்டத்தில் 2 ஆதிதிராவிடர்கள் மற்றும் 1 பழங்குடியினர் ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடமும் , நாகப்பட்டினம் (நெ), க(ம)ப கோட்டத்தில் 2 ஆதிதிராவிடர்கள் ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடமும் மற்றும் திருவாரூர் (நெ), க(ம)ப கோட்டத்தில் 1 ஆதிதிராவிடர் ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடங்களுக்கு அரசாணை எண்.169/போக்குவரத்து துறை (நெ), நாள்.16.02.1983–இன்படி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
2. தஞ்சாவூர் (நெ), க(ம)ப கோட்டத்தில் 11 ஆதிதிராவிடர்களுக்கான அலுவலக உதவியாளர்கள் காலிப்பணியிடமும் மற்றும் 2 பழங்குடியினருக்கான அலுவலக உதவியாளர் காலிப்பணியிடமும் தஞ்சாவூர் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
3. கும்பகோணம் (நெ), க(ம)ப கோட்டத்தில் காலியாகவுள்ள 7 ஆதிதிராவிடர்களுக்கான அலுவலக உதவியாளர்கள் காலிப்பணியிடத்திற்கு தஞ் சாவூர் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
4. நாகப்பட்டினம் (நெ), க(ம)ப கோட்டத்தில் 5 ஆதிதிராவிடர்களுக்கான அலுவலக உதவியாளர்கள் பணியிடத்திற்கு நாகப்பட்டினம் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விவரம் | | தகுதகில் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர் 6 | ஆதிதிராவிடர் | 5 | 1 | வயது – 01.07.2025 | SC, ST | 18-37 |
| | | | | 2 | கல்வித் தகுதி | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி | |
| | | பழங்குடியினர் | 1 | 3 | இதர தகுதி | இலகுரக வாகன ஓட்டுனர் உரிமம் சான்று (வில்லை பெற்றிருக்க வேண்டும்) | |
| | | | | 4 | ஊதிய விகிதம் | ரூ. 19500–71900 (நிலை–8) | |
| 2 | அலுவலக உதவியாளர் 25 | ஆதிதிராவிடர் | 23 | 1 | வயது – 01.07.2025 | SC, ST | 18-37 |
| | | | | 2 | கல்வித் தகுதி | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி | |
| | | பழங்குடியினர் | 2 | 3 | ஊதிய விகிதம் | ரூ. 15700–58100 (நிலை–1) | |
| | | | | 4 | அனுபவச் சான்று | நிபந்தனை 1–இல் குறிப்பிட்டுள்ள அனுபவச்சான்று இப்பதவிக்கு தேவை இல்லை | |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி, இருப்பிட முகவரி மற்றும் பணி அனுபவம் போன்ற சுயவிபரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச்சான்றிதழ் மற்றும் 2 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ / படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ 17.11.2025 பி.ப 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call Letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி | கண்காணிப்புப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட அலுவலகம், முதல் தளம், பிரகதி கார்டன், திருச்சி தஞ்சாவூர் பிரதான சாலை, பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர்–613 403. |
| அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி | |
| தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த தஞ்சாவூர் கோட்டப்பணியிடம் | கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, பனகல் கட்டிடம், தஞ்சாவூர்–613 001. |
| தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த கும்பகோணம் கோட்டப்பணியிடம் | கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நம்பர் 1, காரைக்கால் சாலை, கும்பகோணம் – 612 001. |
| நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த நாகப்பட்டினம் கோட்டப்பணியிடம் | கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சொக்கநாதர் கோவில் தெரு, மகாலெட்சுமி நகர், நாகப்பட்டினம்–611 003. |

செ.ம.தொ.இ / **1222** / ஒப்பந்தப்புள்ளி / 2025

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம் தஞ்சாவூர்.**